# சத்தியேந்திராவுக்குக் ஹெக்டர் பதிலளிப்பார் பண்டாரி இரு பகுதியுடனும் தனித் தனிபேச்சு

(திம்பு)

நேற்று முன்தினம் பூட்டான் மாநாட்டில் 'ரெலோ' இயக்கத்தின் சார்பில் கலந்துகொண்ட சட்டத்தரணி நடேசன் சத்தியேந்திரா கிளப்பிய சட்டப் பிரச்சினைகளுக்கும், நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கும் இலங்கைக் குழுத் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தன இன்று பதிலளித்து உரையாற்றுவார் எனத் தெரியவந்துள்ளது. நேற்று முழு நாளும் பதிலறிக்கையைத் தயாரிப்பதிலேயே ஹெக்டர் முழுக் கவனத்தையும் செலவழித்ததாகவும் தெரிய வந்துள்ளது. அதே வேளை பாரத வெளியுறவுச் செயலர் ரமேஷ் பண்டாரி நேற்றுக் காலை தனி விமானமூலம் பூட்டான் புறப்பட்டார். நேற்று பிற்பகல் இலங்கைக் குழுத் தலைவரையும், தமிழீழக் குழுத் தலைவர்களையும் சந்தித்துப் பேசியதாகவும் தெரிவிக்கப்பட்டது. இன்றைய பேச்சுவார்த்தையில் திரு. பண்டாரியும் கலந்து கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

Registered as a Newspaper in Sri Lanka
விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 16-8-85 வெள்ளிக்கிழமை (ஆடி 32 ஜுலைக்கஸ்தா 28) முழக்கம் 191

★ திம்பு மாநாட்டில் 'புளொட்' பிரதிநிதி மொகமட் பிரேம் நவாஸ் பேச்சு:

# தமிழர் முஸ்லிம்களை பிரித்தாள சிங்கள அரசு சதி நடவடிக்கை!

## பாரம்பரிய உறைவிடங்களைப் பாதுகாப்போம்!

## ஹெக்டர் ஜெயவர்த்தனவும் கேதீஸ்வரனும் நேருக்கு நேர் சூடாக வாதம் புரிந்தனர்

(திம்பு)

**நன்னெடுங்காலமாக ஒன்றாக வாழ்ந்து வரும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிளவுபடுத்தி, அவர்களிடையே இனப்பூசலை ஏற்படுத்த அரசாங்கம் பலகாலமாக சதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பூட்டான் மாநாட்டில் பங்குபற்றிவரும் தமிழீழக் குழுக்களின் பிரதிநிதிகளில் ஒருவரான ஜனாப் மொஹமட் பிரேம் நவாஸ் குற்றஞ் சாட்டினார்.**

நேற்று முன்தினம் புதன்கிழமை காலை நடைபெற்ற மாநாட்டில் நீண்ட உரையாற்றிய ஜனாப் நவாஸ், பௌத்த சிங்கள ஆட்சியாளர்கள் இடைக்குழுவாலுறவால் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இரு இனங்களையும் பிரிக்க எடுக்கும் முயற்சிகளை கடைசிவரை அனுமதிக்கப் போவதில்லை என்று சூளுரைத்தார்

... 6-ஆம் பக்கம் பார்க்க

## பூட்டான் பேச்சு பிரச்சினையை தீர்க்கும் என்கிறார் ராஜீவ்

இலங்கை இனப் பிரச்சினைக்கு பூட்டான் மகாநாடு மூலம் நிரந்தரத் தீர்வு காண முடியுமென்று தனது சுதந்திர தினப்பேச்சில் பிரதமர் ராஜீவ் காந்தி குறிப்பிட்டுச் சொன்னார்.

இந்த நம்பிக்கை தமக்கு இருக்கிறது என்று குறிப்பிட்ட பிரதமர் பஞ்சாப், அஸாம் பிரச்சினைகளுக்குக் காணப்

—6—ஆம் பக்கம் பார்க்க

## 'புளூபிலிம்' டெக் பறிக்கப்பட்டது

யாழ்நகரில் 'புளூபிலிம்' படம் காட்டிய மினி தியேட்

...6—ஆம் பக்கம் பார்க்க

## பாவற்குளத்தில் 7 பேர் கொலை; செட்டிக்குளத்தில் பதற்ற நிலை!

(வவுனியா)

வவுனியாவில் பாவற்குளம் என்ற இடத்தில் நேற்று முன்தினமிரவும் நேற்று முற்பகலும் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் எழு பேர் மரணமானதாக தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினமிரவு மூன்று தமிழர்கள் இனம் தெரியாதவர்களால் கொல்லப்பட்ட பின்னர் அவர்களின் சடலங்கள் எரிக்கப்பட்டதாகவும் முதலில் தெரியவந்தது.

நேற்றுக் காலை அருகிலுள்ள பழைய ஊறுவ என்ற இடத்தில் நான்கு சிங்களவர்கள் இனந் தெரியாதவர்களால் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, செட்டிக்குளம் பகுதியில் பதற்ற நிலை அதிகரித்துள்ளது. இதனால் செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் நேற்று முதல் தற்காலிகமாக மூடப்பட்டது.

அதேவேளை, மதவாச்சியில் பொலிஸார் மீட்டெடுத்த கடத்தப்பட்ட பஸ்ஸொன்றுக்குள் குண்டு கிடக்கக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நெடுஞ்செழியன் நம்பிக்கை:

## இலங்கைப் பிரச்சினைக்கு ராஜீவ் தீர்வு காண்பார்

(சென்னை)

"பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி பஞ்சாப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்ததுபோல் இலங்கை இனப்பிரச்சினையையும் சுமுகமாகத் தீர்த்து வைப்பார்" என்று தமிழ்நாடு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் நேற்று தேசியக்கொடியை ஏற்றி வைத்து சுதந்திரதின விழாவில் உரை நிகழ்த்துகை யில நம்பிக்கை தெரிவித்தார்.

'தேசிய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் மக்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும் என வற்புறுத்திய அவர் மத்திய மாநில உறவுகள் சீராக இருக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு மத்திய அரசுடன் ஒத்துழைத்தே வருகிறது" என்றும் சொன்னார்.

### வவுனியாவில் குண்டு வெடிப்பதை அடுத்து:

## ராணுவம் சுட்ட இளைஞரின் சடலம் கடத்தப்பட்டது!

(வவுனியா)

வவுனியாவில் நேற்றுக்காலை அனாதரவாகக் கிடந்த பார்ஸல் ஒன்றை ராணுவத்தினர் கைப்பற்றி வெடிக்க வைத்ததையடுத்து இடம்பெற்ற சம்பவமொன்றில் தமிழ் இளைஞர் ஒருவர் சுடப்பட்டு மரணமானார்.

இங்குள்ள ஹட்டன் நாஷனல் வங்கிக்கு முன்னால்

...6—ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் நெருக்கடிநிலை அதிகரிப்பு; சிங்களவர் வெளியேறுவதாக அறிவிப்பு!

(திருமலை)

திருகோணமலை கல்வித் கந்தோருக்கு இனம் தெரியாதவர்கள் குண்டுவீசித் தாக்கியதாகவும், தீவிரவாதிகளின் பயமுறுத்தலால் பெரும்தொகையான சிங்களவர்கள் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது வாகனங்களையும், உடைமைகளையும் அவர்கள் பறிமுதல் செய்யக் கூடுமென பல சிங்களவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

திருமலைக் கல்விக் கந்தோரில் ஜி. சி. ஈ. பரீட்சை வினாவிடைத் தாள்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த போதே குண்டு வீசப்பட்டதாம்.

அதே வேளை திருமலை நகருக்குள் தீவிரவாதிகள் வந்திருப்பதாக கிடைத்த தகவலைத்

...6—ஆம் பக்கம் பார்க்க

## முருங்கன் முயற்சி முறியடிப்பு மடு பஸ்களுக்கு எச்சரிக்கை

முருங்கன் இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலை பாதுகாப்புப் படையினர் முறியடித்ததாக 'லங்காபுவத்' நேற்றிரவு அறிவித்தது.

இந்த முகாம் மீது தீவிரவாதிகள் கைக்குண்டுகளை வீசியதாகவும், பதிலுக்கு படையினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால், தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மடுத்தலத்திற்கு

...6—ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் பரீட்சையைப் பகிஷ்கரிக்கத் தீர்மானம்

யாழ், பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள் எதிர்வரும் முப்பதாம் திகதி நடத்தப்படவுள்ள இரண்டாம் வருடப் பரீட்சைக்குத் தோற்றுவதில்லை என முடிவு செய்திருப்பதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இப் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசு, வதிக்கடன் ஆகியன வழங்கப்படமாட்டாது எனப் பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவித்திருப்பதையும் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்த அம்மாணவர் பிரதிநிதி, பல்கலைக் கழக நிர்வாகத்தை ஸ்தம்பிதமடையச்

...6—ஆம் பக்கம் பார்க்க

## குப்பைக்குள் கிடந்த குண்டு

அல்லைப்பிட்டியில் குப்பைக்குள் கிடந்த உருண்டையான

—6—ஆம் பக்கம் பார்க்க

## உற்சவம் ஆரம்பமாகிறது

(நவாலி)

நவாலி அருள்மிகு அத்தி ரான் முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் எதிர் வரும் புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி 29ம் திகதி ரதோற்சவமும், 30 ஆம் திகதி தீர்த்தோற்சவ மும் நடைபெறவுள்ளது.

## நன்னீர் திட்டவேலை

யாழ்ப்பாணக் குடாநாட் டில் நன்னீர் திட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள் ளன. மூன்று கோடி ரூபா செலவில் நடைபெறும் இந்த வேலைகளின் முதற்கட்டமாக இப்பகுதி வாவிகளினுள் கடல் நீர் உட்செல்லாதவாறு தடை மதில்கள் கட்டப்படும்.



சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர்

## நினைவு தினம் இன்று

உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீலசோப் தற் பொழுது கூடிய நிறையுடன் புதிய முறையில் மெருகூட் டப்பெற்று எங்கும் விற்பனையாகிறது.

புதிய விலை ரூ. 2/20 சதம் மட்டுமே,

10 மேலுறைகளை அனுப்பி அழகிய இராமகிருஷ்ண பரமஹம்சர் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்,

## சாரணர்களின் பாசறை வகுப்பு

(நல்லூர்)

யாழ். பரி. யோவான் கல் லூரிச் சாரணர்களின் வரு டாந்தப் பாசறை நல்லூர் பரி: யாக்கோபு ஆலய ஜெப மண் டபத்தில் ஐந்து நாட்கள் கள் நடைபெற்றது. சாரணர் களுக்கான பயிற்சிகளையும், போதனா வகுப்புகளையும் திரு வாளர் யே. எஸ். பொன்னையா நடாத்தினார். வடமாகாண சாரணர் குழு பொறுப்பாளர் திரு. நல்லையா வருடாந்த பாசறையில் அதிதியாகக் கலந்து கொண்டார்.

இறுதி நாள் நடைபெற்ற "காம்பவர்" நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாண ஆர்ச்டீக்கனும், நல்லூர் பரி. யாக்கோபு ஆலய குருவுமாகிய அருட்திரு சாம் டி. ஹோர்கிண்டன் அடிகளார் கலந்து கொண்டார். வரு டாந்த பாசறைக்கான ஏற் பாடுகளை சாரண ஆசிரியர் திரு. எஸ். சந்திரமௌலீசன் செய்திருந்தார்.

## வீடமைப்பு கடன்

(சரசாலை)

கைதடி நவபுர வீடமைப்புத் திட்டத்தில் இருபத்தைந்து குடும்பங்களுக்கு தலா ஏழாயி ரத்து ஐநூறு ரூபா வீதம் கட னை வீடமைப்பு அதிகாரசபை வழங்கவுள்ளது. இத்தகவலை சாவகச்சேரி தொகுதிக்கான வீடமைப்பு அதிகார சபை உத் தியோகத்தர் கே. சிவநேசன் தெரிவித்தார்.





✳ யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோசெப் மாரின் எலிசபெத் ஜோதி தம்பதிக ளின் மகள் பிறின் ரூஸ் சாந்தி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ சாவகச்சேரி சரசாலையைச் சேர்ந்த குமாரசாமி புஷ்ப லீலா தம்பதிகளின் மகள் ரஞ் சினி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ். 614, நாவலர் வீதி யைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் சாந்திமதி தம்பதிகளின் மகள் சாந்தினி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ் 614, நாவலர் வீதி யைச் சேர்ந்த மருதலிங்கம் விஜயலக்சுமி தம்பதிகளின் மகன் பிரபீந்தன் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகி றார்.

✳ சோண்டாவில் புகையிரத வீதி விவேகானந்தராசா சந் திரலீலா தம்பதிகளின் மகன் சுகிர்தன் இன்று தனது ஏழா வது பிறந்தநாளைக் கொண் டாடுகிறார்.

✳ இளவாலி ஸ்ரனிஸ்லாஸ் லீலா தம்பதிகளின் மகள் மேரி ஜீவாங்கனி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ கைதடி தெற்கு சிவகோசரி யார் புஷ்பராணி தம்பதிக ளின் மகன் சுஜந்தன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ வேலணை மேற்கு ஸ்ரீஸ்கந்த ராஜா மங்கையர்க்கரசி தம்பதி களின் மகள் ஸ்ரீ ஜனநிவி இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடு கிறார்.

✳ மிருசுவில் பளுமய வாய்க் கால் அலக்சாண்டர் யோக ராணி தம்பதிகளின் மகன் ஜெராட் திலக்சன் இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## மினி பஸ் சங்க நிர்வாகிகள் தெரிவு

(அச்சுவேலி)

வலி-கிழக்கு தனியார் மினி பஸ் சங்க நிர்வாகிகள் தெரி வில் போஷகர்களாக திரு. நா. இராசேந்திரன், திரு. சு. முத்துக்குமாரசாமியும் தலை வராக திரு. நா. மதனசேகர னும் உப தலைவராக திரு. எம். துரைசிங்கமும் செயலா ளராக திரு. ஜெயராமச்சந்தி ரனும் உபசெயலாளராக திரு. க. சந்திரபோசும் பொருளா ளராக திரு. எஸ். வேல்ராச னும் தெரிவு செய்யப்பட்ட னர். ஆறுபேர் கொண்ட நிர் வாகக் குழுவும் தெரிவு செய் யப்பட்டது.


GURUMAHARAJ-JI

# யூனிவேர்சல்

UNIVERSAL — FOR GOD AND COUNTRY

கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

இவ்வாண்டிற்கான இறுதிப் பிரிவுகள் யாவும் 19-8-1985 முதல்

## A/L 86, 87 கலை, வர்த்தகம் (காலை 9 மணி முதல்)

பொருளியல்: திரு. கிருஷ்ணநந்தன்
கணக்கியல்: திரு. மரியதாஸ்
புவியியல்: திரு. குணராஜா
வர்த்தகம்: திரு. ஜெயராம்
இந்து நாகரீகம்: திரு. சுப்பிரமணிய ஐயர்
அளவையியல்: திரு. சுப்பிரமணியம்
தமிழ்: திரு. வைகுந்தநாதன்

## A/L 86, 87 விஞ்ஞானம் (மாலை 3 . 30)

தாவரவியல்: திரு. ஐங்கரநேசன்
விலங்கியல்: திரு. குகதாசன், திரு. மைக்கேல்
இரசாயனவியல்: திரு. செல்வரட்ணம், திரு. மனோகரன்
பௌதீகவியல்: திரு. சௌந்தி, திரு. திவாகரன்
தூய கணிதம்: திரு. பத்மநாதன்
பிரயோக கணிதம்: திரு. திவாகரன்

## A/L 87 விசேட தாவரவியல் வகுப்பு

(காலை 7 : 30)

திரு. ஐங்கரநேசன்

O / L

காலை, மாலை, பகல்

முழு நேர வகுப்புகள்

O/L SPECIAL MATHS CLASS

★ பாதுகாப்பான அமைவிடம்

★ தரத்திற்கும் ஒழுங்கிற்குமான ஒரேயொரு நிறுவனம்

★ உயர்தர வகுப்புகளுக்கு பட்ட தாரிகளைக் கொண்ட ஒரே யொரு நிறுவனம்

# புலன்இரண்டுமிழந்த ஓவியர் உயர்கல்விக்கு டில்லி பயணம்
## முன்னாள் அ.அதிபரின்முயற்சி பலிதம்

(வேலணை)

வேலணை கிழக்கைச் சேர்ந்த திரு. கந்தையா சந்திரதாஸ் (இளங்கோ) ஓவியக் கலையில் உயர்கல்வி பெறுவதற்காக இந்திய அரசின் உதவி பெற்று புதுடில்லி பயணமானார். பிறவியிலேயே பேசும் சக்தியையும், செவிப்புலனையும் இழந்த இவர் கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் பன்னிரு ஆண்டுகள் பயின்று க. பொ. த பரீட்சையில் சித்திரத்தில் அதி உன்னத சித்தி பெற்றவராவர். பாடசாலையிலும் வெளியிலும் பல சித்திரப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றிகளை ஈட்டிய இவர் நல்லூரில் தனியார் ஸ்தாபனமொன்றில் ஓவியக் கலைஞராக நீண்டகாலம் கடமையாற்றினார்.

முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ இவரது திறமையை மெச்சி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஓவியக் கண்காட்சிகளை நடாத்த பெருமுதவி செய்தார். கொழும்பு கலாபவனத்தில் நடைபெற்ற இவரது கண்காட்சிக்கு திரு. லயனல் பெர்னாண்டோவின் முயற்சியின் பெயரில் ஜனாதிபதி, பிரதமர், கலாசார அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்டு இவரது திறமையை வெகுவாக பாராட்டினார்கள். அத்துடன் முன்னாள் யாழ் அரச அதிபர் தலைமையில் யாழ் மாவட்ட கலாசார மன்றம் தேநீர் விருந்துடன் பொற்கிழி வழங்கி இவரைக் கௌரவித்தது.

முன்னாள் அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் கலாச்சார அமைச்சு மேற்கொண்ட முயற்சியின் பயனாக புதுடில்லியிலுள்ள ஓவியக் கல்லூரியில் உயர்கல்வி பெற இந்திய அரசின் உபகாரநிதி வழங்கப்பட்டு சென்ற மாதம் 27ம் திகதி டில்லி பயணமானார்.

# பின்தங்கிய நிலை மக்களுக்கு உதவ வை.எம்.சீ.ஏ. தயங்காது

(நல்லூர்)

இன்று எமது நாட்டுக்கு சேவை மனப்பான்மையுடன் பணி புரியும் சமூக சேவையாளர்களே தேவையாகிறது கீழ் மட்டத்தில் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களை கை தூக்கி அவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த வகையில் இப்பகுதியில் வாழும் மக்களின் நல்வாழ்வுக்காக உடுவில் வை. எம். சீ. ஏ. ஸ்தாபனம் தனது பங்களிப்பைச் செய்ய பின் நிற்காது.''

இவ்வாறு சண்டிலிப்பாய் சிறுவர் பூங்காவில் நடைபெற்ற மாதர் சங்க இல்ல விளையாட்டுப் போட்டிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட உடுவில் வை. எம். சீ. ஏ. ஸ்தாபனச் செயலாளர் திரு. பிறின்ஸ் இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

சமூக சேவகி திருமதி ஏ. ஆர். தப்பியப்பா தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில், சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய அதிபர் திரு. எ. அமிர்தலிங்கம் பேசுகையில் விளையாட்டுப் போட்டிகளில் சாதி, மத, நிற பேதங்கள் கிடையாது. சிறந்த விளையாட்டு வீரனிடம் அடக்கம், தலைமைதாங்கும் பொறுப்பு, உற்சாகம், என்பன காணப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் திரு. செ. இரத்தினம் பேசுகையில் போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும் பண்புள்ளவர்களாக வாழ வேண்டும். இதன் மூலமே சமுதாயத்தில் சிறந்த பிரசைகளாக வாழ முடியும் என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் இ. சின்னத்தம்பி ஆசிரியர், பிரபல எழுத்தாளர் திரு. நா. வே. சண்முகம் திரு. ச. தணிகாசலம் ஆகியோர்கள் கூட்டத்தில் பேசினார்கள். அருட்திரு. ஆர். துரைராசா அடிகளார் போட்டியில் வெற்றி பெற்றோருக்கும் பரிசில்களை வழங்கினார்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் த. தில்லைநடேசன்
(சட்டத்தரணி)

மலர்வு: 4.9.1938    உதிர்வு: 28.7.1984

திதி 16-8-1985

எம்மையெல்லாம் ஆளாக்கிய எம் ஒளிவிளக்கு இறையடி அடைந்து ஓராண்டானாலும், எம் நெஞ்சங்களில் எண்ணற்ற இனிய நினைவுகளை நிலைக்கவிட்டு, காலமெல்லாம் நின்பிரிவுதனை நினைத்து ஏங்கவிட்டு, எம்மைப்பிரிந்த எமது அன்புச் செல்வமே, நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் அன்புருவம் என்றும் எம் இதயத்தை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

தந்தை, தாய், மனைவி, மக்கள் மைத்துனர்கள், சகோதரர்கள், மாமிமார், மாமன்மார்,

மாதனை, பருத்தித்துறை.

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(ஆவரங்கால்)

கோப்பாய் வடக்கு மகிழடி வைரவர் தேவஸ்தானத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் 45 நாள் மண்டலாபிஷேகத்தின் பூர்த்தி விழாவும் சங்காபிஷேகமும் நாளை சனிக்கிழமை பகல் நீர்வேலி கந்தசாமி கோவில் பிரதிஸ்டா குரு சிவஸ்ரீ இராசேந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் வைரவர் பெருமானுக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறவுள்ளது.

# செவிப்புலனற்றவர்களை வீட்டுக்குள் வைத்திருக்காது வெளியே அனுப்ப வேண்டும்

"செவிப்புலன் அற்றோரைச் சில காலங்களுக்கு முன் பெற்றோர் வீடுகளில் வைத்து வெளி உலகத்தைப் புரிந்து கொள்ளாதவர்களாக வைத்திருந்தனர். இன்றோ அந்த நிலைமை மாறி வருகின்றது'' இவ்வாறு நவீல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் பதினெட்டாவது ஆண்டுவிழாவில் சங்கத் தலைவர் க. சண்முகநாதன் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர்; புலனிழந்தவர்களின் முன்னேற்றம் எமது சமுதாயம் முன்னேற அத்தியாவசியமானது. இன்று பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் ஒருசில இடங்களில் இன்றும் சிலர் புலனற்ற பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே வைத்திருக்கின்றனர். இதனைப் பெற்றோர் தமது கவனத்தில் கொள்ளுதல் மிக அவசியமானது என்றார்.

அழைப்பை ஏற்று விழாவிற்கு வருகைதந்த பாடசாலை அதிபர், ஜே. எஸ். டேவிட், உபஅதிபர் க. கோபாலகிருஷ்ணன், சங்க உறுப்பினர் அனைவருக்கும் தலைவர் நன்றி தெரிவித்தார்.

க. சண்முகநாதன் தலைவராகவும், முகம்மதுஅலி, அ. சண்முகலிங்கம் ஆகியோர் உபதலைவர்களாகவும், க. இரத்தினேஸ்வரன் செயலாளராகவும் அ. தம்பிராசா உபசெயலாளராகவும், சி. அருள்நேசன் பொருளாளராகவும், சி துரைராசா உப பொருளாளராகவும், வீ. விக்னேஸ்வரன், க. ஞானேஸ்வரன் இருவரும் குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

## பதவி உயர்வு

(ஆவரங்கால்)

மன்னார் அரசாங்க அதிபர் பணிமனையில் காணிப் பிரிவில் ஏழு வருடங்கள் தொடர்ந்து பதவிநிலை உதவியாளராகப் பணியாற்றிய திரு. தம்பு இராமலிங்கம் பதவி உயர்வு பெற்று கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பரிபாலன அலுவலராகப் பணியாற்றி வருகின்றார்.

யாழ். பரியோவான் கல்லூரியின் முன்னைய மாணவரான இவர் உடற்பயிற்சி வீரரும் "சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்" இலங்கை 'றிசேவ் பெரலிஸ்'ப் படை உறுப்பினருமாவார். பொதுநிர்வாகச் செயலாளரினால் நடத்தப்பெறும் நீதிமன்ற முதலியார் பரீட்சையில் சித்தியெய்திய இவர் நீதி பரிபாலன அதிகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளருமாவார்.

## சமாதான சபைத் தெரிவு

(உடுப்பிட்டி)

மக்களிடையே ஏற்படும் பிணக்குகளைச் சமாதானத் தீர்த்து வைக்கும் நோக்குடன் உடுப்பிட்டிக் கிராம சேவையாளர் பிரிவில் சமாதான சபையொன்று உதவி அரசாங்க அதிபரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. திரு. வ. தங்கராசா தலைவராகவும், திரு. சி. கந்தசாமி செயலாளராகவும் தெரிவாகினர். செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் சி. செல்வச்சந்திரன், க. தங்கவடிவேல், கி. மகேஸ்வரன், கோ. துரைசிங்கம், கொ. குணசிங்கம், இ. இராசரத்தினம், மா. சேனாதிபதி, க. சோமசுந்தரம், சி தருமராசா, வ. வர்ணகுலசிங்கம், ச. ஜெயக்கொடி, அ. சந்திரசேகரம், செல்வி சீதா வேலுப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். வாரந்தோறும் கூடிப் பிரச்சினைகளை ஆராய்ந்துவரும் இச்சபை மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுத் திகழுகிறது.

# தீவுப்பகுதி தொலைதொடர்பு சேவை குறித்து மகஜர்

(புங்குடுதீவு)

"தொலைத்தொடர்பின்றி தீவுப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள். கம்பங்களில் கம்பிகளில்லாமையால் தொலைத்தொடர்பே ஸ்தம்பிதமடைந்துள்ளது. வெளிநகரங்களிலும், தென்னிலங்கையிலும் கூடுதலான தொடர்புகளை வைத்திருக்கும் தீவுப்பகுதி மக்கள் தொலைத்தொடர்பின்றி வாடுகின்றனர், தென்னிலங்கையில் இருக்கும் தங்கள் உறவினர்களின் நிலையை அடிக்கடி அறிய ஆவல்படும் தீவுப்பகுதி மக்களுக்கு தொலைபேசி வசதி இல்லாதிருப்பது மிகுந்த வேதனைக்குரிய விடயமாகும். தொலைபேசிக் கம்பிகளைப் பாதுகாப்பதில் பொது மக்களும் இளைஞர்களும் உதவி புரிவார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் இச்சேவையைப் புனரமைத்து சீர்செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்''.

இவ்வாறான மகஜர் ஒன்றை புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத் தலைவரான சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் வடபிரதேச தொலைத்தொடர்பு பொறியியலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தீவுப் பகுதியிலுள்ள பெரும்பாலான தொலைபேசிக் கம்பங்களும் கம்பிகளின்றி மொட்டையாகக் காட்சியளிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## உற்சவம் பற்றி சபை தீர்மானம்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை சட்டத்தரணி திரு. வை. ச. செந்தில்நாதன் தலைமையில் கூடியபோது எதிர் வரும் 30 ஆம் திகதி மணவாளக்கோல உற்சவமும் சங்காபிஷேகமும் வழமைபோல் நடாத்துதல். ஒக்டோபர் 19ஆம்திகதி விநாயகர் சதுர்த்தி உற்சவத்தை நடாத்துவதுடன் தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு அலங்கார உற்சவத்தை நடாத்துதல் ஆகிய தீர்மானங்களை தர்மகர்த்தா சபையினர் நிறைவேற்றினார்கள்.


THE LIONS CLUB OF JAFFNA
(DISTRICT 306 B)
IN ASSOCIATION WITH
The DATA CENTRE is pleased to announce a
FREE COURSE in
COMPUTER PROGRAMMING

organised to assist children of persons adversely affected economically by the prevailing disturbunces

COURSE CONTENT :
Module - I : Computer fundamentals
Module - II : BASIC programming language
Module - III : COBOL programming language
Notes on all modules and practical training on the world's most popular micro computer will also be provided FREE.

THE COMPLETE COURSE IS ABSOLUTELY FREE
COURSE DURATION : Six (6) Months.
VENUE : The DATA CENTRE, 77, Main Street, Jaffna

ELIGIBILITY :
1) Education : Minimum - Six passes in the G.C.E (O/L) with credit in ENGLISH.
2) The family of the applicant should have been adversely affected economically by the prevailing disturbances.
3) Individuals who have previously followed a similar course but could not complete it due to displacement.

To assess eligibility applicants are expected to submit letters, giving relevant details, from either parent or family elder, and from the head of the school last attended or currently attending.

For further details please contact :

G. YUHENDRAN
PRESIDENT - LIONS CLUB OF JAFFNA
83/2, K. K. S. ROAD,
KOKUVIL.

உதய சிந்தனை

*ஆவாரை யாரே அழிப்பர் அதுவன்றிச் சாவாரை யாரே தவிர்ப்பர்—*
*ஓவாமல் ஐயம் புகுவாரை யாரே விலக்குவார் மெய்யம் புவியதன் மேல்*
*—நல்வழி*

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்; தொலைபேசி: 23336

## இதய ஒலி

*16-8-1985 வெள்ளிக்கிழமை (குரோதன ஆடி 32)*

# பூரண அதிகாரத்துக்கு ஒரு நாள் ஓய்வா?

ஒரு மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பமான பூட்டான் பேச்சுவார்த்தைகள், திடீரென 'இழுபறி' நிலைக்கு வந்துள்ளது.

எடுத்த எடுப்பிலேயே அனைத்தையும் தூக்கி எறிந்து பேசிய இலங்கைக் குழுத்தலைவரின் அறிக்கையே, இந்த நிலை ஏற்படக் காரணமென்பதை விரிவாக விளக்க வேண்டியதில்லை.

முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை முடிவில் நான்கு அம்சக் கோரிக்கைகளைத் தமிழீழக் குழுக்கள் இலங்கைக் குழுவின் பரிசீலனைக்கு முன்வைத்தன.

''கொழும்பு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துவிட்டு மீண்டும் நல்ல முடிவுடன் வருவேன்'' என்று நம்பிக்கை கொடுத்து மாநாட்டை ஜூன் ஆறும் திகதி ஒத்தி வைத்தார் ஹெக்டர் ஜெயவர்த்தன.

இலங்கை சமர்ப்பிக்கவிருக்கும் ஆலோசனையைப் பரிசீலிக்க வென்று இவ்வாரம் பூட்டானுக்குச் சென்ற தமிழீழக் குழுக்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

புதிதாக எதையும் தெரிவிக்காத இலங்கைக் குழுத் தலைவர், குழுக்களின் நான்கு கோரிக்கைகளையுமே தூக்கி எறிந்து பேசியமை இலங்கையின் மனப்போக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

முதல் மூன்று கோரிக்கைகளையும் ஏற்கமுடியாது என்று சொன்ன ஹெக்டர், நான்காவது கோரிக்கையை விடுப்பதற்கு தமிழீழக் குழுக்களுக்கு அதிகாரமில்லை என்று கூறியுள்ளார்,

இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டுமென்பதே நான்காவது கோரிக்கையாகும்.

முக்கியமாக மலையக மக்களின் பிரஜாவுரிமையுடன் இது தொடர்பு கொண்டது என்பதாலேயே ஹெக்டர் இவ்வாறு 'பிரதேச வாதம்' பேசியிருப்பார் என்று எண்ணத் தோன்றுகின்றது,

அப்படியானால், இப்போது பூட்டானில் நடைபெறும் பேச்சுவார்த்தை இலங்கையில் வாழும் தமிழர்களின் பிரச்சினை பற்றி ஆராயக் கூட்டப்பட்டதா அல்லது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டும் வாழும் தமிழர்களின் பிரச்சினையை ஆராயக் கூட்டப்பட்டதா என்ற சந்தேகமும் இங்கு எழுவது நியாயமானதே!

மலையகப் பிரதிநிதி ஒருவரும் இப் பேச்சுக்களில் பங்குபற்றினால் அந்த உரிமை தமிழீழக் குழுக்களுக்குக் கிடைக்குமாயின் அதனையும் தமிழீழக் குழுக்கள் செய்யுமாயின் அதன் பின்னர் மலையகம் உட்பட அனைத்து இலங்கைத் தமிழருக்காகவும் பேசும் உரிமையை அரசாங்கம் வழங்குமா?

விதண்டா வாதம் பேசி, இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தட்டிக் கழிப்பதில் 'தம்பி' ஹெக்டர் அண்ணனுக்குக் குறைந்தவரல்ல என்பதை நிரூபிக்கவே முயன்று வருகின்றார்,

அதுதான் போகட்டும்!

எதற்காக நேற்று பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லை? இன்று வரை மாநாடு ஒத்தி வைக்கப்பட்டதற்கான காரணம் என்ன?

தமிழ்க் குழுக்கள் எழுப்பிய பிரச்சினையால் உருவான நிலைமைகள் பற்றி கொழும்புடன் தொடர்பு கொள்வதற்காகவே ஹெக்டர் ஜெயவர்த்தன இன்றுவரை மாநாட்டை ஒத்தி வைத்ததாக அறிவிக்கப்பட்டது உண்மையானால், எந்த முடிவையும் உடனுக்குடன் எடுக்கும் அதிகாரம் அவருக்கு இல்லையா?

ஹெக்டருக்கு தூதுவர் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாகவும், மாநாடு தொடர்பான எந்த முடிவையும் எடுக்கும் சகல அதிகாரங்களும் அவருக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனவினால் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வார இறுதியில் வெளியிடப்பட்ட செய்திகள் பொய்யானவையா?

அதிகாரம் வழங்கப்பட்டது உண்மையாக இருக்குமானால் கொழும்புடன் தொடர்பு கொள்வதற்கு அவருக்கு ஒரு நாள் அவகாசம் வேண்டுமா?

அரசு பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதால், இரு தரப்பினரும் நடத்தும் கயிறிழுப்புப் போட்டியை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மீண்டும் பண்டாரியின் அவசர உதவி கோரப்பட்டுள்ளது.

''முகாம்களை மூடு; ஆயுதங்களைப் போடு; இலங்கைக்குத் திரும்பு'' என்கிறது இலங்கை அரசு.

''வடக்கையும் கிழக்கையும் இணை; சுய நிர்ணய உரிமையைத் தா'' என்கின்றன தமிழீழக் குழுக்கள்.

இரண்டுக்கும் நடுவே பண்டாரி எடுக்கப்போகும் முடிவையே அனைவரும் வழிமேல் விழிவைத்துப் பார்த்திருக்கின்றனர்.

இரண்டாம் கட்டத்தின் இறுதித் தீர்ப்பு, பண்டாரியின் மதிநுட்பத்திலேயே தங்கியிருக்கிறது.

---

★ இன்று நடைபெறும் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய கொடியேற்ற வைபவத்தை முன்னிட்டு இச்சிறப்புக் கட்டுரை பிரசுரமாகின்றது

# ஆற்றங் கரையுறையும் அற்புத ஞானவேல்

வ. குமாரசாமி

ஈழத் திருநாட்டின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்கும் செல்வச்சந்நிதி நற்றமிழும் நாவலரும் பாவலரும் நிறைந்து விளங்கும் அருட் பூமியாகிய யாழ் நகரின் வட கீழ்த்திசையில் திருவல்லியாறென அனாதி நாமம் பூண்ட தொண்டமானாற்றங்கரையில் அமைந்திருக்கின்றது.

மிக அனாதி காலத்தில் நன்னீராக விளங்கிய திருவல்லியாறு தனது சூழலிலே செந்நெல்லும் தினையும் கரும்பும் தேனொழுகு கனிச்சோலைகளையும், குளிர்ந்த ஆலஞ்சோலைகளையும் வெருண்டோடிடும் மான்கூட்டங்களையும் ஆடும் மயிலினங்களையும் கொண்டு விளங்கியது. பிற்காலத்தில் இப்பகுதியைத் தனது ஆட்சிக்குட்படுத்திய தொண்டமானெனும் பேரரசன் வர்த்தக நோக்கத்திற்காக திருவல்லியாற்றை வெட்டிக் கடலுடன் சங்கமிக்கவிட்டான். இதன்பின் நன்னீரும் உப்பு நீரும் சங்கமிக்கும் புனித ஆற்று நீராகவும், தொண்டமானாறு என்ற புது நாமத்தையும் பெற்று விளங்குகின்றது.

இப்புனித ஆற்றங்கரை யோரமாக அமைந்திருக்கும் இவ்வாலயம், மூர்த்தி, தல, தீர்த்த விஷேடம் பெற்று முத்தித்தலமாக விளங்குகின்றது.

## பூர்வீக வரலாறு

தேவர்களைத் துன்புறுத்தி வந்த வீர மகேந்திரபுரி மன்னனாகிய சூரபத்மனைச் சம்மாரஞ் செய்யத் திருச்செந்தூருக்குத் தெற்கேயுள்ள ஏமகூடத்தை நோக்கி எழுந்தருளிய முருகப் பெருமானும் வீரவாகு தேவரும் மற்றும் போர் வீரர்களும் தேவர்களும் இத்தலத்திற்கு வந்ததாகவும் அந்நேரம் மாலை நேரமாக இருந்தபடியால் முருகப்பெருமான் இங்கே தங்கி நிற்க வீரவாகு தேவரும் மற்றும் போர் வீரர்களும் தேவர்களும் பூசனை புரிந்து திருவருள் பெற்றார்களெனவும் இவர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் தனது பொற்றிருவடியை இத்தலத்தில் பதித்தாரெனவும் இத்தல புராணம் கூறுகின்றது. இப்பொற்றிருவடியின் மகிமையால் இத்தலம் இன்று அதியற்புத சக்திவாய்ந்ததாகத் திகழ்கின்றது. இத்தலத்தில் இன்றும் செக்கல் பொழுதில் தேவர்கள் முருகனை வழிபடுகிறார்களென்பதை மெய்ஞ்ஞானிகள் உணர்கின்றனர்.

விஸ்ரவசு என்னும் தேவலோக கந்தர்வன் வியாழபகவானின் சாபத்தால் பூலோகத்தில் கதிர்காமக் காட்டில் யானையாக அவதரித்து அட்டகாசம் புரிந்து வந்தான். கதிர்காம வேலனைத் தரிசிக்க வந்த கெண்டி முனிவரும், அவர்களின் சிஷ்யர்களும் இவ்யானையைக் கண்டார்கள். இவர்களையும் எதிர்த்து அட்டகாசம் புரிந்த இந்த யானையைக் கண்டு முனிவரின் சிஷ்யர்கள் பயந்தார்கள்; உடனே கெண்டி முனிவர் பக்கத்திலுள்ள வெற்றிலைக் கொடியில் காணப்பட்ட வெற்றிலையின் நுனியைக் கிள்ளி முருகனைத் தியானித்து யானையை நோக்கி விட்டார். அவ்வெற்றிலை நுனி கூரிய வேலாயுதமாக மாறி யானையைப் பிளந்தது. அச்சர்ந்தர்ப்பத்தில் விஸ்ரவசு பழைய நிலையையடைந்தான். முருகப் பெருமான் இவர்களுக்குக் காட்சிகொடுத்து விஸ்ரவசுவை நோக்கி 'ஈழத்தின் வடபால் எம்மைத் தேவர்களும் வீரவாகு தேவரும் வழிபாடாற்றிய தலத்திற்குச் சென்று வழிபாடாற்றி அவ்விடத்தில் முத்தியின் பங்கூடினையடைவாயாக' என ஆசி கூறி மறைந்தருளினார்.

## வெற்றிலை வேல்

வெற்றிலை வேலாக மாறிய திருவிளையாடலை நினைவு கூரும் முகமாக எம்பெருமான் எழுந்தருளும் போது அவன் கைவேலில் முக்கோண வடிவில் வெற்றிலை சாத்தப்பட்டு பதிசக்தி வேலெனப் போற்றப்படுகின்றான்.

விஸ்ரவசு இத்தலத்தில் முருகநாதரென்ற திருநாமம் பூண்டு முருகனை வணங்கி மகாசமாதி கூடி அவனுடன் இரண்டறக்கலந்தார்.

இவரின் சமாதித்தானத்தில் தானாகவே ஒரு பூவரச விருட்சம் தோன்றியது. இதுவே இவ்வாலயத்தின் தலவிருட்சமாகும். இந்நிழலின் கீழ் குமரன் அமர்ந்து அடியார் இருள் கற்றும் அற்புத ஜோதியாக விளங்குகின்றான்.

இத்தலத்தைத் தேவர்களும் முனிவர்களும் வணங்கிப்பேரானந்தமடைந்தார்கள். மானிடர் மீது பெருங்கருணை கொண்ட குமரவேள் அவர்களும் தன்னை வழிபாடாற்றிப் பேரானந்தங் கொள்ள வேண்டுமென்ற பெருவிருப்பினால் ஒரு திருவிளையாடலை நிகழ்த்தப் பெருவிருப்புக் கொண்டான்.

## கதிர்காமரும் கந்தக் கடம்பனும்

தொண்டமானாறு என்னும் அருள் விளங்கு பூமியைத் தனது பிறப்பிடமாகக் கொண்டவர் மருதர் கதிர்காமரெனும் குருகுலத்துதித்த செம்மல். இவர் தனது அன்றாட ஜீவனோபாயத்திற்காக இவ்வாற்றங் கரையோரமாக அனுதினமும் சென்று தனது தொழிலைப் புரிந்து வருவது வழக்கம். கருவிலேயே முருகனின் திருவருள் பெற்று கதிர்காமரென்ற நாமம் பெற்று விளங்கும் இவர் இவ்வாற்றங் கரையோரமாகவுள்ள பூவரசநிழலில் அனுதினமும் முருகநாமத்தை உச்சரித்து அங்கு களைப்பினுக் அமர்ந்திருப்பார். ஒருநாள் இவர் ஆற்றங்கரைக்கு அப்பாலுள்ள கரையில் தொழில் புரிந்துகொண்டு தனிமையில் நின்ற பொழுது ஒரு இடைச் சிறுவன் கைகொட்டி ''கதிர்காமரே அக்கரையில் இருந்து இக்கரைக்கு வாரும்'' என அழைத்தான். இச்சிறுவன் யாரென கதிர்காமர் தன்னுள் சிந்தித்தார். பூர்வீக நற்றவத்தின் பயனால் கதிர்காமரும் காந்தத்தின் எதிரில் பட்ட ஊசிபோல் ஈர்க்கப்பட்டுக் கரையைத் தாண்டிவந்தார். இடைச் சிறுவன் தனது பல திருவிளையாடல்களினால் கதிர்காமருக்குப் பல அற்புதங்களை உணர்வித்தார்.

கதிர்காமரின் பக்குவநிலையை உணர்ந்த இடைச் சிறுவனாகிய முருகப் பெருமான் அவ்விடத்தில் அரிசி, காய் கறிகளைக் காட்டுவித்து அப்பூவரச நிழலின் கீழ் சமையல் செய்வித்து பக்கத்திலுள்ள ஆலமிலைகளைப் பறித்து இவ்விடத்தில் அடியார்கள் அமுது செய்வார்களென அறுபத்தைந்து இலைகளில் படையல் செய்வித்தார். சில நொடிப்பொழுதில் அறுபத்து மூன்று இலைச் சாதங்களும் மறைந்தன. தனக்கும் கதிர்காமருக்குமென படைக்கப்பட்ட இரண்டு இலைச் சாதங்களுமே எஞ்சியிருந்தன. கதிர்காமர் அதிசயித்தார் ஆனந்த மேலீட்டால் கண்ணீர் சொரிந்தார். 'யாரப்பா நீ' யென உன்ன முருக வேண்டினார் சிறுவன் மறைந்து வள்ளி தேவசேனை சமேதராகக் காட்சி கொடுத்தான்: இன்னும் எம்பெருமானின் திருவிளையாடலுக்கிணங்க இவ்வாலயத்தில் அறுபத்தைந்து ஆலமிலைகளில் தினமும் அமுது படைப்பது வழக்கமாக இருந்து வருகிறது

கதிர்காமர் கருணைக்கடலாகிய செவ்வேட் பெருமான் புரிந்த திருவிளையாடலை நினைத்துருகி மீண்டுமொரு முறை காட்சி தரும்படி மனமுருகி வேண்டினார். அன்பனின் பக்திக்கு அடிமையாகிய ஏழைப் பங்காளனாகிய முருகப்பெருமான் மீண்டும் அருட்காட்சி கொடுத்தான். அப்பனுக்கும் அருணகிரிக்கும் அகத்தியற்கும் ஒளவைப் பிராட்டிக்கும் நல்லுபதேசம் செய்த எம்பெருமான் இத்தலத்தில் கதிர்காமருக்கு ஞான உபதேசஞ் செய்தார். தன்னடியினுக்குப் பூசனை புரிந்து பேரானந்த வீட்டையடையுமாறு பணித்தார்.

—5 ஆம் பக்கம் பார்க்க

---

**எமைக் காப்பாய், சந்நிதியானே!**

சூரனை ஒழித்த பாலா
சுகமது அமரர்க்கு சந்த
வீரனாய் விளங்கும் வேலா
வள்ளலாய்ப் பொழியும் கந்தா
நாரணன் மருகா செல்வச்
சந்நிதி உறையுஞ் செல்வா
யாரெமைக் காக்க வல்லார்
யாவுமே நீதான் முருகா!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

★ சுதந்திரத் திருநாளன்று டில்லியில் பிரதமர் ராஜீவ் சர்வதேச கவனம் ஈர்க்கும் உரை:

# விடுதலை கோஷம் உலகின் எப்பாகத்திலிருந்து வரினும் பாரதம் ஆதரிக்கும்

(புதுடில்லி)

"உலகின் எந்தப்பாகத்தில் இருந்தேனும் எழுப்பப்படும் சுதந்திர இலட்சியக் கோரிக்கைகளுக்கு பாரதம் எப்போதும் ஆதரவளித்தே வந்துள்ளது. இந்தவகையில் தென்னாபிரிக்க மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கும் பாரதம் தனது முழு ஆதரவைத் தொடர்ந்தும் அளித்தே வரும்" என்று பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி பாரதப் புண்ணிய பூமியின் முப்பத்து எட்டாவது சுதந்திர தின விழாவையொட்டி வரலாற்றுச் சிறப்புமிக்க டில்லி செங்கோட்டையில் இருந்து நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய முக்கியத்துவம் மிக்க உரையின் போது உணர்ச்சி பூர்வமாக உரைத்தார். முன்னதாக அவர் மூவர்ணத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அவ்வேளை இருபத்தொரு பீரங்கி வேட்டுகள் முழங்கின. செங்கோட்டையைப் பிரதம மந்திரி வந்தடைந்ததும் பாதுகாப்பு மந்திரி திரு. பி. வி. நரசிம்மராவும் முப்படைத் தலைவர்களும் அவரை வரவேற்றனர். முப்படைகளின் அணி வகுப்பையும் அவர் பார்வையிட்டார்.

பிரதம மந்திரி செங்கோட்டைக்குச் செல்வதற்கு முன் அண்ணல் காந்திஜி, ஆசிய ஜோதி ஜவகர்லால் நேரு, அன்னை இந்திரா காந்தி ஆகியோரது சமாதிகளுக்குச் சென்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.



அவர் தனது மேற்படி உரையில் மேலும் கூறியதாவது. "பஞ்சாப்பில் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதையடுத்து அங்கு அமைதி நிலவுகிறது. அமைதி முழு அளவில் நிலைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அங்கு விரைவான வளர்ச்சிதொடர இதுவழிவகுக்கும், தீவிரவாதம் குறைந்ததால் பெருமளவு சாந்தி நிலவுகிறது. நாட்டில் வறுமையை ஒழிக்கும் திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நாம் எவ்வளவோ முன்னேற்றத்தை எட்டியுள்ள போதிலும் கூட எமக்கெதிரே நெடும் பயணம் ஒன்று காத்திருக்கிறது. அதனை எதிர்கொண்டு நம் மகத்தான வளர்ச்சி காணவேண்டும். விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளிலும் நாம் பெருவாரியான முன்னேற்றம் கண்டுள்ளோம். முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு காட்டிய வழியில் அன்னை இந்திரா நாட்டுயர்வுக்காகவும், ஒருமைப்பாட்டுக்காகவும், பாடுபட்டார்.

பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் அன்று சமமான முன்னேற்றம் காணப்படவேண்டும்.

மேலும் பாரதம் சுயேச்சையான அணிசேராக் கொள்கையையே தொடர்ந்து பின்பற்றி வருகிறது. அண்டை நாடுகளுடன் உறவை வலுப்படுத்திக் கொண்டுள்ளது. பூட்டான், நேபாளம், சீனா ஆகிய நாடுகளுடன் சகஜநிலை தோற்றுவிக்கப் பட்டுள்ளது. பாகிஸ்தானுடனும் இந்த வகையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. பாரதத்துடன் அந்நாடு சீரான உறவு வைத்திருக்க வேண்டுமாயின் அணுவாயுதத் தயாரிப்பைக் கைவிட்டு தன் நிலையைத் திருத்திக் கொள்ள வேண்டும். எனது சமீபத்திய ரஷ்ய, அமெரிக்க விஜயங்கள் அந்நாடுகளுடனான உறவை மேலும் வலுப்படுத்திக் கொள்ளப் பெரிதும் உதவின.

அஸாம் பிரச்சினைக்கு உடன்பாடு ஒன்று எட்டப்பட்டு விட்டது"

இவ்வாறு பிரதம மந்திரி தனது உரையில் கூறினார். இது இவ்வாறு இருக்க, பாரத சுதந்திர தினத்தையொட்டி ரஷ்யத்தலைவர்கள் ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும், செய்திகளை அனுப்பிவைத்துள்ளனர்

## எம். ஜி. ஆரின் சுதந்திரதினச் செய்தி

# விடுதலைக்கு இன்னுயிர் ஈந்த தியாகிகளை கௌரவிப்போம்

(நியுயோர்க்)

"பாரதத்திருநாட்டின் விடுதலைக்காகத் தம் இன்னுயிர் ஈந்த தியாக தீபங்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தி கௌரவிக்க வேண்டும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சுதந்திர தினத்தையொட்டி நியுயோர்க்கில் இருந்து விடுத்த சிறப்புச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் அமைதிக்கும் மக்கள் யாவரும் பாடுபடவேண்டும்" என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, முதலமைச்சர் நியுயோர்க்கில் அங்கு வாழும் இந்தியர் மத்தியில் பேசுகையில் தமிழ் நாட்டிற்கு வந்து தொழில் துறையில் முதலீடு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். அதற்குத் தனது அரசு முழு ஆதரவளிக்கும் என்றும் அவர் சொன்னார்.

பின்னர் அவர் வாஷிங்டன் புறப்பட்டுச் சென்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது

## 16 பேர் மடிவு

(பெய்ரூட்)

லெபனானில் கிறிஸ்தவ-முஸ்லிம் படைகளுக்கிடையே புதிதாக மூண்ட கலவரத்தில் பதினாறு பேர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சவூதி, சிங்கப்பூர், மலேசியா, குவைத்,

போன்ற நாடுகளுக்கு.

வீட்டுப் பணிப் பெண்கள், கைத்தொழிலாளர், விமான நிலைய பணியாளர் போன்ற தொழில் வசதிகளுக்குச் செல்வதற்கு ஏற்ற பிரயாண வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

துரித கதியில் பாஸ்போர்ட், போன்ம், விசா ஆகிய சேவைகளும் செய்து கொடுக்கப்படும்.

ஷாஹி ஷீபா

ஏஜென்ஸீஸ்

125, கடற்கரை வீதி குருநகர்

யாழ்ப்பாணம்

(பழைய பொலிஸ் நிலைய அருகாமையில்)

## விமானத்தின் வால்பகுதி கண்டுபிடிப்பு

(டோக்கியோ)

விபத்துக்குள்ளான ஜம்போ ஜெட் விமானத்தின் வால் பகுதி கடற்படையினரால் கண்டு எடுக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

## கைப்பற்றினர்

(கம்பாலா)

உகண்டாவின் மிகப்பெரும் கிளர்ச்சிப்படைகளில் ஒன்றான தேசிய எதிர்ப்பு இராணுவம் நகரம் ஒன்றைக் கைப்பற்றி தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கம்பாலாவை அண்மித்தது இந்நகரம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை உகண்டா ஆட்சியாளர்கள் கெரில்லாக்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்த முனைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ★ அவருக்கு வயது 61 ★
## மனைவியர் எண்ணிக்கை 89

(ஒஸ்லோ)

இந்தியாவின் கிழக்கிலுள்ள ஒரிஸா மாநிலத்தில் பணம் மிக்க நிலச்சுவாந்தர் ஒருவர் எண்பத்து ஒன்பது பெண்களைத் திருமணம் செய்துள்ளதாக பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது. உதயநாத் டக்ஹினொம்ற எனும் அறுபத்தொரு பிராயத்தவரின் முதலாவது மனைவி முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் திருமணமாகி இரண்டு வாரங்களில் பிரிந்து விட்டதனால் தாம் பலதார மணத்திற்கு தம்மை ஆட்படுத்தியதாக இவர் செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்துள்ளார்.

தான் இதுவரை திருமணம் செய்து கொண்ட எண்பத்து எட்டுப் பெண்களில் ஐம்பத்து ஏழு பேர் ஒன்றில தம்மை விட்டுவிலகி அல்லது விவாகரத்துச் செய்து கொண்டனர். எனவும், இருபத்தாறு பேர் இறந்துவிட்டனரென்றும், சகல திருமணங்களும் பாரம்பரிய இந்துக்கலாச்சாரத்திற்கு அமையவே நடாத்தப் பட்டது என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

# அமெ. ஜனாதிபதியின் குதிரை சவாரி ஆசைக்குத் தடை!

(வஷிங்டன்)

குடலில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகன் ஒரு மாத கால சிகிச்சையின்பின் மூன்றுவார கால ஓய்வின் பொருட்டு கலிபோர்ணியா மாநிலத்திற்கு பயணமானார். வெள்ளை மாளிகை அறிவித்த பயணம் பற்றி செய்திக்கையில் 74 வயதான ஜனாதிபதி 'லாஸ்ஏஞ்சல்'ஸின் வடக்கே மலையுச்சியில் உள்ள 'றஞ்சாடெல் சிலோ' வாசஸ்தலத்தில் ஓய்வெடுப்பார் என அறிவித்தது.

வெள்ளை மாளிகை உயர் அதிகாரி ஒருவர் ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்கு மருத்துவர்கள் கூடுமான வரையில் ஜனாதிபதிக்கு குறைந்த அளவு வேலைகளையே வழங்குமாறு கடுமையாக எச்சரித்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளார். றீகன் குதிரை ஓட்டத்தை பெரிதும் விரும்புபவரெனினும். குதிரை ஓட்டத்தைத் தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளார்.

## ஆற்றங்கரை ...

- 4ஆம் பக்கத் தொடர்

### திருநாமம் பெற்ற வரலாறு

பூசனை புரியும்படியாக எம்பிரான் பணித்ததும் "மந்திர மொன்றறியேன் மலர்தான் போற்றும் வகையறியேன்" எனக் கண்ணீர் மல்க கைகட்டி வாய்புதைத்து சிரந்தாழ்த்தி நின்றார் கதிர்காமர். அதற்கு முருகப்பெருமான் "குறவுடைய கதிரமலைக் கோயிலின் கண் குறவரினம் தொண்டாற்றும் கொள்கை போலத்துன்று துணியால் வாயைச் சொலெழாமல் தூய்மையாய் மறைத்து மிகுகந்த நெஞ்சோடு என்றுமுன எம்பாதச் சுவடுதனை இதமாகப் பூசிப்பாய்" எனப்பகர்ந்தார். அதற்குக் கதிர்காமர் "கதிரமலை சென்றறியேன் கருதும் பூசைக் கன்னறியேன்" எனறு கூற "கதிர்காமம் காட்டுகிறேன் கருதி என்னோடிவிரைவின் வருக" வெனக் கூறிக் கண்ணை மூடச் சொல்லித்தன் பன்னிருகரங்களிலும் கதிர்காமரின் கரங்களை எம்பெருமான் பற்றிக் கொண்டார். கதிர்காமர் கண்ணை விழித்தார் கதிரமலையின் அழகைக் கண்டார். அங்குநடைபெறும் பூசைமுறைகளைக் கண்டார்; கதிர்காமர் கையில் முருகப்பெருமான் வேலொன்றைக் கொடுத்து திருவல்லியாற்றங் கரையிலுள்ள பூவரச நிழலின் கீழ் அதனை வைத்து பூசனை புரியுமாறு பணித்தார்; கதிர்காமரும் முருகனின் பணிப்பை நிறைவேற்றினார். அன்றுமுதல் இத்தலம் செல்வச்சந்நிதி என்ற திருநாமம் பெற்று விளங்குகிறது.

இங்கு நடைபெறும் பூசனை முறையெல்லாம் முருகன் விருப்பின்படி கதிர்காமரால் செய்யப்பட்டவை இன்றும் கதிர்காமர் சந்ததியினர் இவ்விதிமுறை வழுவாது முருகனை வழிபாடாற்றி வருகின்றனர்.

கதிரமலையும் செல்வச்சந்நிதியும் ஒன்றென்பதையும் இங்கும் அங்கும் தானே அமர்ந்தருள் புரிபவனென்பதையும் அடியார்களுக்குணர்த்தப் பெருவிருப்புக் கொண்ட எம்பெருமான் கதிரமலைக் கொடியேற்றத்தன்று தான் அங்கு போவதாகவும் பின் அங்கு நடைபெறும் திருவோணத் தீர்த்தோற்சவத்தன்றிரவு திரும்பிவருவதாகவும் கதிர்காமருக் குணர்த்தியருளினார்; இன்றும் கதிரமலைக் கொடியேற்றத்தன்று இங்கிருந்து வேல் போகும் வைபவமும் தீர்த்தத்தன்றிரவு வேல்வரும் வைபவமும் நடைபெறுவதைக் காணலாம்.

ஆவணி பூரணைக்குரிய அமாவாசை அற்றமுறும் பிரதமையில் மிகு அற்புதமான முறையில் தரையினின்றும் வள்ளிக்கொடி தானேயெழும் பித்தோன்றும் இத்தினமே இங்கு கொடியேற்று விழாவாகக் கொண்டாடப்படுகிறது அன்று தொடக்கம் விழா ஆரம்பமாகி ஆவணிப் பூரணையில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் விழா நிறைவெய்துகிறது. இங்குள்ள தீர்த்தம் வேற்காரணி என்ற புனித நாமம் பெற்று விளங்குகின்றது.

கட்டடத் தொழில் நுட்பவியல் நிறுவனம்
136, பிரதான வீதி யாழ்ப்பாணம்

Diploma in Draughtsmanship

ஆரம்பம் 19-08-85 காலை 9.00
(MORE SUITABLE FOR A/L STUDENTS])

ஈழமுரசு

உலகின் சகல பாகங்களுக்கும் விமான டிக்கட்டுக்கள்
மலிவாகப் பெறுவதற்கு
மற்றாஸ், திருச்சி, சிங்கப்பூர், கோலாலம்பூர், நியூயோர்க்
லண்டன் ஆகிய நகரங்களுக்கு மலிவான விமான டிக்கட்
பாஸ்போட் விசா மற்றும் சகல பிரயாண
ஒழுங்குகள். நாடுங்கள்
TET
ரான்ஸ் யூரே ரவல்ஸ்
திரு. மகேந்திரராசா
இல 6, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

பாதுகாப்புக்காக இடம் மாறியதால்

# சாணிப் பதிவுப் புத்தகங்களைப் பார்வையிடுவதில் சட்டத்தரணிகள், பொதுமக்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்ற வளவில் இயங்கிவந்த காணிப் பதிவு அலுவலகம் யாழ். செயலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதனால் பொதுமக்களும், சட்டத்தரணிகளும் பெருஞ் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயலகத்தில் இலங்கை வங்கி இயங்கி வந்த அறையிலேயே காணிப் பதிவுப் புத்தகங்கள் இப்பொழுது வைக்கப்பட்டுள்ளன. போதிய இடவசதியின்மையாலும், புத்தகங்களை வைப்பதற்கு வேண்டிய அலுமாரிகள் இல்லாமையினாலும் பதிவுப் புத்தகங்கள் எல்லாம் இங்கு நிலத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் சட்டத்தரணிகளும், பொதுமக்களும் தமக்குத் தேவையான புத்தகங்களையோ விபரங்களையோ உடனடியாகப் பார்வையிடவோ பிரதி எடுக்கவோ முடியாமலுள்ளது. சுமார் இருபதாயிரம் உறுதிப் பிரதிப் புத்தகங்களும், சுமார் ஆறுபிரம் காணிப் பதிவுப் புத்தகங்களுமே இங்கு வைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் 1940 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டவையாகும். இதற்கு முன்னர் உள்ளவை நீதிமன்ற அலுவலகத்திலுள்ள காணிப் பதிவு அலுவலகத்திலேயே உள்ளன.

1940-ம் ஆண்டிற்குப்பிற்பட்டவை பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ். கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். செயலகத்திற்கு மாற்றப்பட்டமை தெரிந்ததே. இப்புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைப்பதற்குப் போதிய வசதியின்மையால் புத்தகங்கள் பழுதடைவதுடன் 'கறையான்' போன்றன அரிப்பதற்கும் வாய்ப்பேற்படலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்ற வளவிலுள்ள அலுவலகத்திற்கு செயலகத்தில் இருக்கும் மேற்படி புத்தகங்களை மாற்றுவதன் மூலமே இதனை பொதுமக்கள் சிரமமின்றிப் பயன்படுத்தக் கூடியதாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை வங்கி ஊழியர்கள் இன்று மாலை வெளிநடப்பு

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள வெளிநடப்பு இன்று அறிவிக்கப்பட்டவாறு நடைபெறும் என்று சங்கப் பேச்சாளர் ஒருவர் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

சம்பள உயர்வு கோரி ஊழியர்களால் நடத்தப்படவுள்ள இவ் வெளிநடப்புப் போராட்டம் நாட்டிலுள்ள சகல அரச வங்கிகளிலும் இன்று இடம் பெறும். பிற்பகல் 3.00 மணியுடன் ஊழியர்கள் வெளிநடப்புச் செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மறியல் போராட்டம் சம்பந்தமாக கொழும்பில் சுவரொட்டிகளை ஒட்டிய சிலர் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

வடபகுதியிலும் இப்போராட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் காலையில் வங்கிக் கடமைகள் வழமைபோல நடைபெறும்.

## தீர்வு ஏற்படின் நிராகரியோம்! போராட்டம் தொடரும்!

(யாழ்ப்பாணம்)

இன்று அரசு நடத்தும் பேச்சுவார்த்தையினால் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு இடைக்காலத் தீர்வு ஏற்பட்டால் தாம் அதனை நிராகரிக்கப் போவதில்லை எனவும், அதேவேளை அதனோடு திருப்தி கண்டு தமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிடாமல், நமது இலக்கை அடையும் வரை மக்களுடன் ஒன்றுபட்டுப் போராடுவோம் எனவும் தமிழ் மக்கள் விடுதலைச் சேனை (ரி. பி. எல். ஏ.) வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் துண்டுப் பிரசுரத்தில் பின்வரும் நான்கு விடயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன; தலைமைத்துவப் போட்டிகளைத் தவிர்ப்போம், மக்கள் யுத்தத்தை முன்னெடுக்கும் வகையில் பாஸிஸ யு. என். பீக்கு எதிரான பலமான ஐக்கிய முன்னணியைக் கட்டி வளர்ப்போம். பிற்போக்கு யு. என். பி. அரசின் அடக்குமுறை ஆட்சியில் உரிமைகள் மறுக்கப்பட்ட தொழிலாளர், விவசாயிகளை முன்னணியாகக் கொண்ட மக்கள் படையைக் கட்டி வளர்ப்போம்.

## உணவு முத்திரை புகார் பற்றி விசாரணை!

நாவாந்துறை மீனவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு முத்திரை விநியோகம் சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுகள் பற்றி விசாரணை நடைபெற்று வருவதாக யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுத்துபாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணம் வழங்குமாறு பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் சார்பில் முப்பதுபேர் கையொப்பமிட்டு யாழ். உதவி அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார்கள்.

### ராணுவம் ....

—1ம் பக்கத் தொடர்

காணப்பட்ட பார்ஸலில் கிடந்த குண்டு ராணுவத்தால் வெடிக்க வைக்கப்பட்டதன் பின்னர் வீதியில் காணப்பட்ட நால்வரை துரத்திச் சென்று ராணுவம் சுட்டதாம்.

மரணமான இளைஞரின் சடலம் பலத்த காவலுடன் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்ததாயினும் நேற்றிரவு 8-30 மணியளவில் இனம் தெரியாதவர்களால் சடலம் கடத்திச் செல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது.

### அச்சகத்தில் கொள்ளை

யாழ். நகரிலுள்ள அச்சகமொன்றில் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்று முன்தினம் இரவு கொள்ளையடிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

### யாழ். பல்கலைக்கழக—

...1ஆம் பக்கத் தொடர்

செய்யும் விதமாக தாம் மேற்கொண்டுவரும் மறியல்போராட்டம் தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை தொடரும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளையில் இரண்டாம் வருட மாணவர்களின் மறியல் போராட்டத்திற்கு முதலாம் வருட கலைப்பீட மாணவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளார்கள். இன்று பிற்பகல் நான்கு மணிக்கு முன்னர் கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் மறியல் போராட்டத்தில் தாமும் இறங்குவதற்கு முதலாம்வருட மாணவர்கள் தீர்மானித்துள்ளார்கள். புதிய மாணவர்களுக்கான ஆங்கிலப் பரீட்சை தடைப்பட்டதையிட்டும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

அதே வேளையில் இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்கள் நேற்று மேற்கொண்ட மறியல் காரணமாக பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்திலுள்ள முக்கிய அலுவலகங்கள் எதுவும் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டது. சுமார் முந்நூறு வரையிலான மாணவர்கள் நேற்றைய மறியலில் ஈடுபட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முப்பதாம் திகதி நடைபெறவுள்ள பரீட்சையை இரண்டு வாரங்கள் ஒத்திவைக்குமாறு கோரியே மாணவர்கள் இப்போராட்டத்தை நடத்திவருகிறார்கள்.

### முருங்கன்....

...1ஆம் பக்கத் தொடர்

அனுராதபுரம், மதவாச்சிப் பகுதிகளிலிருந்து வந்த போக்கு வரத்துச் சபை பஸ்கள் இனம் தெரியாதவர்களால் பயமுறுத்தி திருப்பி அனுப்பப்பட்டனவாம். இதனையடுத்து மன்னாரில் திடீர் என பதற்ற நிலை ஏற்பட்டதால் சகல கடைகளும் இழுத்து மூடப்பட்டன.

யாழ். மாவட்ட

## வாக்காளர் பட்டியல் வேலை மாத இறுதிக்குள் பூர்த்தி

இவ் வருடத்திற்கான வாக்காளர் பட்டியலில் தயாரிக்கும் வேலைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கிராம சேவகர்கள் ஊடாக வழங்கப்பட்ட பட்டியல்கள் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னரேயே பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் சில பகுதிகளில் தற்போதைய நிலை காரணமாக இவ்வாறான பட்டியல்கள் இதுவரை, பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்படவில்லை.

சகல இடங்களிலிருந்தும் இவ்வாறான பட்டியல்கள் பூர்த்தி செய்யப்பட்டு இம் மாத முடிவிற்குள் அல்லது செப்டெம்பர் மாத முற்பகுதியில் பெறப்படும் என யாழ். செயலகத்திலுள்ள தேர்தல் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

சகல கிராம சேவையாளர்கள் ஊடாகவும் பட்டியல்கள் பெறப்பட்ட பின்னர் அவை அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 28ஆம் திகதி வரை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

வாக்காளர்களின் ஆட்சேபனைகள் இக்காலப் பகுதியில் ஏற்கப்பட்ட பின்னர் டிசெம்பர் மாத முற்பகுதியில் முழுமையான வாக்காளர் பட்டி தயாரிக்கப்படும்.

### மரண தண்டனை

முகாம் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டமை, சக தோழர் பவா என்பவரைக் கொலை செய்தமை என்பவற்றிற்காக பொன்கலன் எனப்படும் சந்திரபாபுவிற்கு 'ஈரோஸ்' மரண தண்டனை வழங்கியுள்ளது.

தவறான நடத்தைகள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டும், முகாம் தோழர்களின் கட்டுப்பாட்டையும் மீறி தன்னிச்சையாக இவர் செயற்பட்டமையால் இத்தண்டனை வழங்கப்பட்டதாக 'ஈரோஸ்' அறிவித்துள்ளது.

### தமிழர் முஸ்....

... 1ஆம் பக்கத் தொடர்

'புளொட்' இயக்கத்தின் சார்பில் ஜனாப் மொஹமட் பிரேம் நவாஸ் இங்கு தொடர்ந்து பேசுகையில், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் அனைவரும் தமது பாரம்பரிய உறைவிடத்தைப் பாதுகாக்கும் பணியில் ஒன்றுபட்டு உழைத்து வருகின்றனர் என்றும், இறுதிவரை இந்தப் பணி தொடருமென்றும் குறிப்பிட்டதுடன் தமிழரையும் முஸ்லிம்களையும் எவராலும் பிரித்துவிட முடியாதெனவும் தெரிவித்தார்.

இம்மாநாட்டின் ஒரு கட்டத்தில் இலங்கைக் குழுத் தலைவர் ஹெக்டர் ஜெயவர்த்தனா குறுக்கிட்டு "இங்குள்ள பிரதிநிதிகள் இலங்கையின் முழுத் தமிழர்களினதும் பிரதிநிதிகளல்ல; குழுக்களின் பிரதிநிதிகள் மட்டுமே" என்று குறிப்பிட்டார்.

ஈ. பி. ஆர். எல். எப். பிரதிநிதி எல். கேதீஸ்வரன் இச் சந்தர்ப்பத்தில் ஹெக்டர் ஜெயவர்த்தனாவைப் பார்த்து "நாம் சட்டரீதியான பிரதிநிதிகள் இல்லையென்றால் பிறகு எதற்காகத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்" என்று கேட்டதைத் தொடர்ந்து இரு பகுதியினருக்குமிடையே சூடான வாக்குவாதம் இடம்பெற்றதாம்.

### இன்று

வண்ணை ஸ்ரீ வில்வலிங்க மகா கணபதி ஆலய திருப்பணி வேலைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று காலை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

### திருமலையில்....

தொடர்ந்து பொலிஸார் நேற்று முன்தினமிரவு முதல் நேற்று அதிகாலை வரை தொடர்ந்து சுட்டவண்ணமிருந்ததாகவும், பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்ததாகவும் எமது நிருபர் அறிவித்துள்ளார்.

### குப்பைக்குள்....

பொருளை எடுத்து விளையாடிய பதினொரு வயதுச் சிறுவனொருவன் அது வெடித்ததால் ஸ்தலத்திலேயே மரணமானார். மற்றொரு சிறுவனின் இரு கைகளும் துண்டிக்கப்பட்டன.

### பூட்டான் ...

பட்ட தீர்வையும் சுட்டிக் காட்டினார்.

இதே வழியில் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் இந்தப் பிராந்தியத்தில் நிலவும் பதற்ற நிலை குறையும் எனவும் பிரதமர் மேலும் நம்பிக்கை தெரிவித்தார்.

### புளூபிலிம்....

டாஒன்றின் வீடியோ டெக்கை மாணவர் இளைஞர் பொதுமன்றம் நேற்றுப் பறிமுதல் செய்தது. இந்த மினி தியேட்டரில் முன்னர் ஒரு தடவை சோதனையிட்ட மேற்படி அமைப்பு 'புளூபிலிம்'களை எடுத்து எரித்தது குறிப்பிடத்தக்கது.

"ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ்" ஸ்தாபனத்தாரால் 87, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 16-8-85 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336